# Joint Press Release of the 16th Round of India-China Corps Commander Level Meeting

July 18, 2022

----------------------------------------------------------------------------------------------------

## இந்தியா-சீனா நாட்டு ராணுவத்தினர் இடையிலான 16 வது சுற்று கூட்டத்தின் கூட்டறிக்கை

ஜூலை 18, 2022

இந்தியா-சீனா நாட்டு ராணுவத்தினர் இடையிலான 16 வது சுற்று கூட்டம் 17 ஜூலை 2022 அன்று இந்தியப் பகுதியான **சுஷுல்-மோல்டோ எல்லை** சந்திப்பில் நடைபெற்றது.

மார்ச் 11, 2022 அன்று நடந்த கடைசி கூட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் மேற்கு எல்லைப் பகுதியில் நிலவும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இருதரப்பினருக்கும் இடையே ஆக்கபூர்வமான முறையிலும் எதிர்கால அடிப்படையிலும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எஞ்சியுள்ள பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காண இருநாட்டுத் தலைவர்களும் அளித்த வழிகாட்டுதலின் பிரகாரம் ஒளிவுமறைவு இல்லாமலும், ஆழமாகவும் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. மீதமுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மேற்கு எல்லைப் பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டவும், இருதரப்பு உறவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் உதவும் என்பதை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

இதற்கு இடைப்பட்ட காலத்தில், மேற்கு எல்லைப் பகுதியில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரதன்மையைப் பராமரிக்க இருநாட்டு ராணுவத்தினரும் ஒப்புக்கொண்டனர். இருநாடுகளும் இராணுவ மற்றும் இராஜரீதியாக பேச்சுவார்த்தையைத் தொடரவும் நெருங்கிய தொடர்பில் இருக்கவும் ஒப்புக்கொண்டன. மீதமுள்ள பிரச்சனைகளுக்கு இருநாடுகளும் ஏற்கக்கூடிய சுமூகமான தீர்வை விரைவில் எட்ட தீர்மானிக்கப்பட்டது

புது டெல்லி
ஜூலை 18, 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.